NPS/NPA2020/PUB/01

**தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் 2020**
**தொலைநிலை (Zoom) மதிப்பீட்டிற்கான வழிமுறை**

தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் 2020ற்கான கள மதிப்பீட்டு செயல்முறை தற்போது நாட்டில் நிலவும் COVID-19 தொற்றுநோய் காரணமாக எதிர்பார்த்தபடி தொடர முடியவில்லை என்பதால், தொலைநிலை மதிப்பீட்டை (remote assessment) ஒரு செயல்முறையாக மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி, இந்த கள மதிப்பீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, மேலும் இந்த முயற்சிக்கு தங்களின் முழு பங்களிப்பையும் தருமாறு வேண்டுகிறோம்.

இந்த தொலை மதிப்பீட்டு செயல்முறை இரண்டு நிலைகளில் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**முதல் நிலை**

தாங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் உள்ள ஒவ்வொரு அளவுகோல்களுக்கும் உட்பட்டு அது தொடர்புடைய தகவல்களை சரிபார்க்க கண்காணிப்பு தொடங்குவதற்கு குறைந்தது 05 நாட்களுக்கு முன்னதாக தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகளின் மின்னஞ்சல் முகவரிகளுக்கு தரவு, ஆவணங்கள் மற்றும் அது தொடர்புடைய வீடியோக்களை அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**(விண்ணப்ப அளவுகோல்களை சரிபார்க்க அறிவுறுத்தல் பத்திரம், இணைப்பு 1 – அரச பிரிவு, இணைப்பு 2 – பாடசாலைப் பிரிவு, இணைப்பு 3 – உற்பத்திகள் மற்றும் சேவைகள் பிரிவு)**

**இரண்டாவது நிலை**

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நியமிக்கப்பட்ட மூன்று மதிப்பீட்டு குழாம் உறுப்பினர்கள் பங்கேற்று இரண்டு மணி நேரத்திற்குள் **வீடியோ கலந்துரையாடல் (Zoom Meeting**) நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கண்காணிப்பிற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தங்களுக்கு தேவையான அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளையும் எங்கள் தொழில்நுட்பக் குழுவால் உங்களுக்கு வழங்கப்படும்.

அந்த தினத்தில், எங்கள் உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நிறுவனத்தினை கண்காணிப்பதற்கு வருகை தருவார். அந்த உத்தியோகத்தர் தங்கள் நிறுவனத்தின் COVID 19 விதிகளின்படி செயல்படுவார். அந்த உத்தியோகத்தருக்கு தேவையான முழுஆதரவையும் வழங்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

**வீடியோ கலந்தரையாடல் (Zoom Meeting**)

1. நிறுவனத் தலைவருடன் 10 நிமிட முக்கிய கலந்துரையாடலை நடத்துதல்.

2. நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரி நிழற்படக்கருவி மற்றும் ஒலிவாங்கி பயன்பாட்டுடன் குழு வழங்கிய அறிவுறுத்தல்களின்படி ஒரு கையடக்கத் தொலைபேசியுடன் (32-64 மெகாபிக்சல் நிழற்படக்கருவி அளவுடன்) நிறுவனத்திற்குள் நுழைவதிலிருந்து அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியவாறு விளக்கமளிக்க வேண்டும்.

3. உப அலுவலகங்கள் தலைமை அலுவலக வளாகத்திற்கு வெளியே இருக்கும் போது, அலுவலகத் தலைவர் உட்பட ஊழியர்கள் அந்த இடத்திலிருந்து (Zoom) தொழில்நுட்பத்தின் மூலம் பரிசோதனையில் ஈடுபட வேண்டும் மற்றும் தேவையான அனைத்து தொழில்நுட்ப கருவிகளும் தயாராக இருக்க வேண்டும்.

4. ஒவ்வொரு பிரிவிலும் நுழைவதற்கு முன், உப அலுவலகம் அதன் முன் பார்வை, பிரிவு பெயர்ப்பலகை மற்றும் நுழைவு அலுவலக இடம் என்பன தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.

5. முக்கிய பிரிவுகளை உள்ளடக்கும் போது, ஒவ்வொரு பிரிவுத் தலைவரும் தனது பிரிவில் ஐந்து நிமிட விளக்கக்காட்சியை வழங்க வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட நேரம் கிடைப்பதால் நேர முகாமைத்துவத்தில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

6. மேலும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிழற்படக்கருவிகள் அலுவலகத்தை காண்பிப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டும், மேலும் ஒரு நிழற்படக்கருவி எப்போதும் நிலைநிறுத்த வேண்டும், இதனால் பிரிவின் முன்புறம் நகராமல், முழு பகுதியையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். வேறு நிழற்படக்கருவி மூலம் பிரிவு அதிகாரிகளுக்கு அனுப்பி அவர்களுடன் கலந்துரையாட பயன்படுத்த வேண்டும், அவர்களின் கடமை மேசையின் பரப்பளவு, கோப்புகளை வைத்திருக்கும் அலுமாரிகள் போன்றவை நடுவர் குழாமிற்கு காண்பிக்கப்பட வேண்டும்.

7. கையடக்கத் தொலைபேசிக்குப் பொறுப்பான அதிகாரி தேவையான அனைத்து இடங்களையும், ஆவணங்களையும் காண்பித்தல், கணினி தரவுத்தளங்களைக் காண்பித்தல், நடுவர் குழாமிற்கு தேவைப்படும் நேரத்தில் அதற்குப் பொறுப்பான அதிகாரிகளுடன் கலந்துரையாடலுக்கான பரிந்துரை ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். (இதற்கு பொருத்தமான அதிகாரிகளைப் நியமிக்கலாம்.)

8. மதிப்பீட்டு செயற்பாடுகளின் போது தேவையான ஆவணங்களை (Document) மற்றொரு அதிகாரி ZOOM தொழில்நுட்பம் வழியாக அனுப்ப தயாராக இருக்க வேண்டும். (ZOOM → Chat → File Sharing)

9. இயற்கை அல்லது தவிர்க்க முடியாத காரணங்களினால் (அவசர மின் தடை, இணைய செயலிழப்பு, சீரற்ற வானிலை) பரிசோதனையின் போது இடையூறு ஏற்படாத வகையில் கவனம் செலுத்த வேண்டும்.

10. இந்த தொலைநிலை மதிப்பீட்டுச் செயல்முறையின் முக்கிய நோக்கம் நீங்கள் எங்களுக்கு அனுப்பிய விண்ணப்பத் தகவல்களைச் சரிபார்த்து, மதிப்பிட்டு, தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியில் நீங்கள் பெற்ற இடத்தை உங்களுக்குக் வழங்குவதாகும், மேலும்

இப்போட்டியில் முதலாவது மற்றும் இரண்டாவது இடங்களை தீர்மானிக்க மட்டுமே (தேவைப்பட்டால்) கள சோதனை நடத்தப்படும்.

11. இந்த இரண்டு கட்டங்களின் கீழ் தங்கள் திருப்திக்கு அனைத்து உண்மைகளையும் சமர்ப்பிக்க தங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும், சமர்ப்பிக்கப்படாத விடயங்களுக்கு தேசிய உற்பத்தித்திறன் செயலகம் மதிப்பெண்களை வழங்க வேண்டிய கட்டாயமில்லை என்பதையும் நாங்கள் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

12. இந்த கண்காணிப்பு தொடர்பான உரையாடல்கள் மற்றும் வரைபடங்கள் எங்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

13. ஒரு யூடியூப் கணக்கை (youtube Account) உருவாக்கி, நீங்கள் காட்ட விரும்பும் அனைத்து வீடியோக்களையும் பதிவேற்றி (Upload), அவற்றை வெளியிடப்படாத முறையில் Unpublish mode சேமிக்கவும். பின்னர் தங்கள் யூடியூப் கணக்கிற்கான இணைப்பை (youtube Account Link) மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரி வழங்கிய மின்னஞ்சல் முகவரி மூலம் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு அனுப்ப வேண்டும். (நீங்கள் இங்கே பதிவேற்றும் (Upload) வீடியோக்களை எந்த ஒரு நபரும் பார்க்க மாட்டார்கள் மற்றும் தொடர்புடைய இணைப்பின் (Link) உதவியுடன் மட்டுமே பார்க்க முடியும் என்பதையும் நாங்கள் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.)